# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ).,**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**ஆணை எண். 230/ந/2025, நாள் 11.03.2026**

K. மல்லிகா,
வழுதரெட்டி, விழுப்புரம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
விழுப்புரம் நகராட்சி,
விழுப்புரம் மாவட்டம். – எதிர்மனுதாரர்

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம், வழுதரெட்டி, சண்முகா கார்டன் பேஸ்–2, பிளாட் எண்.97 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி K. மல்லிகா என்பவரது 23.06.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.06.2025 அன்று பெறப்பட்டு, 230/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம், வழுதரெட்டி, சண்முகா கார்டன் பேஸ்–2, பிளாட் எண்.97 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி K. மல்லிகா என்பவர் 23.06.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

“1) மேற்கண்ட முகவரியில் வசித்து வரும் மூத்த குடிமகளான நான் எங்களது குடியிருப்பு பகுதிகளுக்கு புதிய சாலை அமைப்பதற்காக கடந்த 22.07.2024 தேதியன்று விழுப்புரம் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு பதிவு அஞ்சல் மூலம் மனு செய்திருந்தேன்.

2) 22.07.2024 நாளிட்ட கோரிக்கை மனு மேதகு ஆளுநர் அவர்களுக்கும் அனுப்பப்பட்டது. ஆளுநரின் செயலகம், ராஜ்பவன், சென்னை –22 அவர்களின் கடித எண். 6782/RTI/2024, நாள் 11.09.2024, கடித எண். 6784/U3/2024, நாள் 10.09.2024 மற்றும் பொதுத்தகவல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) விழுப்புரம் அவர்களின் கடித எண். ஓ.மு.(அ5)/E–2490347(சி.ப.எண்.518)/2024 நாள் 04.10.2024 ஆகியவற்றில் மேற்கண்ட மனுவிற்கு தீர்வு காணும்படி விழுப்புரம் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

3) மேற்படி கடிதத்தை பொருட்படுத்தாமல் விழுப்புரம் நகராட்சி ஆணையர் அவர்கள் இதுநாள் வரை (பத்து மாதங்கள் கடந்தும்) எங்கள் பகுதிக்கு புதிய சாலை அமைத்து தரவில்லை. மேலும் அவர் அரசு பணியை முறையாக செய்யாமலும், வேண்டுமென்றே நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்தி வருகின்றார்.

4) எனவே, கனம் அய்யா அவர்கள் எதிர்மனுதாரர் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்கவும், 22.07.2024–ல் காணும் எங்களது கோரிக்கை மனுவிற்கு தீர்வு காணும்படி பணிவுடன் வேண்டுகிறேன்.

5) மேற்படி எதிர்மனுதாரர் அவர்களின் இந்த செயல்பாட்டினால் மனுதாரர் ஆகிய எனக்கு மிகுந்த மன உளைச்சலும், காலவிரையமும், பணவிரையமும் ஏற்பட்டுள்ளது என்பதனை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

2) மனுதாரால் விழுப்புரம் நகராட்சி ஆணையர் மற்றும் மேதகு மாநில ஆளுநர், சென்னை அவர்களுக்கு முகவரியிடப்பட்ட 22.07.2025 நாளிட்ட மனுதாரரின் கடிதத்தில் கீழ்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றித் தர கேட்டுக்கொண்டுள்ளார்.

"1. மேலே குறிப்பிட்டுள்ள நாங்கள் அனைவரும் விழுப்புரம் நகராட்சிக்கு உட்பட்ட வழுதரெட்டியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சரவணா கார்டன், சண்முகா கார்டன் Phase-2–ல் வசித்து வருகின்றோம்.

2. இங்கு சாலைகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இதனால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. மேலும் பள்ளி மற்றும் கல்லூரி செல்லும் மாணவர்கள், வேலைக்குச் செல்வோர், நோயாளிகள் மூத்த குடிமக்கள் ஆகியோர் பாதிக்கப்படுகின்றனர்.

3. மேலும் இப்பகுதியில் மண் சாலை மட்டுமே உள்ளது. எனவே, வெயில் காலத்தில் தூசி மற்றும் மண்ணாலும், மழை காலத்தில் சேறாலும், நீராலும் அவதியுற நேரிடுகிறது. எனவே மக்களின் சிரமத்தை மனதில் கொண்டு நல்ல தார்சாலை அமைத்திட நடவடிக்கைகளை எடுத்திடும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்."

3) முறையீட்டு மனுதாரரின் புகார் மனுமீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 04.07.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் விழுப்புரம் நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

4) விழுப்புரம் நகராட்சி ஆணையரிடமிருந்து அறிக்கை எதுவும் பெறப்படவில்லை.

5) எனினும் மனுதாரரையும், எதிர்மனுதாரரான விழுப்புரம் நகராட்சி ஆணையரையும் அறிக்கையுடன் 28.01.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 20.01.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6) மனுதாரர் 28.01.2026 அன்று நடை பெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

7) எதிர்மனுதாரரான விழுப்புரம் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.364/2023/எப்1, நாள் 27.01.2026–ல் விழுப்புரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் SIR தேர்தல் பணி தொடர்பாக தினசரி ஒவ்வொரு வாக்காளர்களை நேரில் சந்தித்து விவரம் சேகரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், மாவட்ட ஆட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் தலைமையில் தினசரி SIR பணிகள் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், அரசுக்கு அறிக்கை சமர்பிக்க வேண்டி உள்ளதாலும், 28.01.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு நகராட்சி உதவி பொறியாளர் திரு. கௌதம் என்பவரை அனுப்பி வைப்பதாக தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, 28.01.2026 அன்று நடைபெற்ற விசாரணைக்கு விழுப்புரம் நகராட்சி உதவி பொறியாளர் திரு. கௌதம் என்பவர் ஆஜராகி, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

"மனுதாரரால் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள சாலை வசதி செய்து தரக்கோரியுள்ள இடமானது அனுமதியற்ற மனைப்பிரிவாகவுள்ளது. மேற்படி மனைப்பிரிவிலுள்ள76 மனைகளில் 27 மனைகள் மட்டுமே வரன்முறை செய்யப்பட்டுள்ளது. இதர மனைகள் வரன்முறை செய்ய அறிவிப்பு வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2011–ல் இந்நகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள சாலாமேடு, வழுதரெட்டி, பானாம்பட்டு, காகுப்பம் மற்றும் எருமனந்தாங்கல் ஆகிய 5 ஊராட்சி பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. பாதாள சாக்கடை அமைக்கும் பணி முடிவுற்றபின் மனுதாரரின் கோரிக்கையின்படி தார்சாலை அமைப்பதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு திட்டநிதியின் கீழ் அனுமதி

பெற்று விரைந்து சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது என்ற விவரம் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

8) முறையீட்டு மனுதாரரின் புகார் மனுமீதான விரிவான அறிக்கையுடன் 28.01.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 20.01.2026 நாளிட்ட அழைப்பாணையில் கேட்டுக்கொண்டதற்கிணங்க, 28.01.2026 அன்று விசாரணைக்கு ஆஜரான விழுப்புரம் நகராட்சி உதவி பொறியாளரால், விழுப்புரம் நகராட்சி ஆணையரின் 27.01.2026 நாளிட்ட அறிக்கை கடிதம் ந.க.எண்.524/2026/இ1 இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி அறிக்கையில் முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு எதிர்மனுதாரரான விழுப்புரம் நகராட்சி ஆணையர் கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"மனுதாரர் சாலை அமைத்து தரக்கோரியுள்ள இடமானது விழுப்புரம் நகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள வழுதரெட்டி ஊராட்சி பகுதியாகும். 2011ல் இந்நகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள சாலாமேடு, வழுதரெட்டி, பானாம்பட்டு, காகுப்பம் மற்றும் எருமனந்தாங்கல் ஆகிய 5 ஊராட்சி பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைக்கும் பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நடைபெற்று வரும் நிலையில் மேற்கண்ட பாதாள சாக்கடை திட்ட பணிகளுக்காக பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து அதிகமுள்ள பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் சேதப்படுத்தப்பட்டுள்ள சாலைகளை மறு சீரமைப்பதற்காக திட்ட நிதியின் கீழ் அனுமதி பெற்று சாலைகள் நகராட்சியின் மூலம் போடப்பட்டு வருகிறது.

மனுதாரர் சாலை வசதி செய்து தரக்கோரியுள்ள இடமானது மண்சாலையாகும். அனுமதியற்ற மனைப்பிரிவாக இருந்து, முறைப்படுத்தப்பட்டுள்ள இம்மனைப்பிரிவில் ஒரு சில குடியிருப்புகள் மட்டுமே அமைந்துள்ளது.

எனவே, மனுதாரர் கோரிக்கையின்படி தார்சாலை அமைப்பதற்கு ரூ.32.50 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை திட்டநிதியின் கீழ் அனுமதி பெற்று மேற்கொள்வதற்கு பிரேரணை தயார் செய்து உரிய அனுமதி பெற்று 3 மாதங்களுக்குள் சாலை வசதி செய்து தரப்படும் என்ற விபரம் மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவத்திற்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

9) மனுதாரர் தனது 27.01.2026 நாளிட்ட மின்னஞ்சல் கடிதத்தில் தனது உடல் நலம் காரணமாக மருத்துவமனை செல்ல வேண்டியுள்ளதால் 28.01.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை எனவும், மேற்படி விசாரணையை பிப்ரவரி மாதம் முதல் வாரத்திற்கு மாற்றித்தருமாறும், மேற்படி விசாரணையில் அவரது மகன் திரு. மணிவாசகன் என்பவரை ஆஜராக அனுமதிக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

10) மனுதாரரின் கோரிக்கையினை ஏற்று மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான விழுப்புரம் நகராட்சி ஆணையர் ஆகியோர் 13.02.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 02.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

11) மனுதாரரோ அல்லது மனுதாரர் தெரிவித்தவாறு அவரை சார்ந்த எவரும் 13.02.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

12) எதிர்மனுதாரரான விழுப்புரம் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.364/2023/எப்1, நாள் 12.02.2026–ல் விழுப்புரம் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதியில் SIR பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால், 13.02.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு விழுப்புரம் நகராட்சி உதவி பொறியாளர் திரு. கௌதம் என்பவரை அனுப்பி வைப்பதாக தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து 13.02.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் விழுப்புரம் நகராட்சி உதவி பொறியாளர் திரு. M.R. கௌதம் என்பவர் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டாவறு பதிவு செய்துள்ளார். அதில் –

"நான் 28.01.2026 அன்றைய விசாரணையில் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு மனுதாரரால் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள சாலை வசதி செய்து தரக்கோரியுள்ள இடமானது அனுமதியற்ற மனைப்பிரிவாகவுள்ளது. மேற்படி மனைப்பிரிவிலுள்ள 76 மனைகளில் 27 மனைகள் மட்டுமே வரன்முறை செய்யப்பட்டுள்ளது. இதர மனைகள் வரன்முறை செய்ய அறிவிப்பு வழங்கி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

2011–ல் இந்நகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள சாலாமேடு, வழுதரெட்டி, பானாம்பட்டு, காகுப்பம் மற்றும் எருமனந்தாங்கல் ஆகிய 5 ஊராட்சி பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைக்கும் பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நடைபெற்று வரும் நிலையில் மேற்கண்ட பாதாள சாக்கடை திட்ட பணிகளுக்காக பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து அதிகமுள்ள பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் சேதப்படுத்தப்பட்டுள்ள சாலைகளை மறு சீரமைப்பதற்காக திட்ட நிதியின் கீழ் அனுமதி பெற்று சாலைகளை நகராட்சியின் மூலம் போடப்பட்டு வருகிறது. மேற்படி பாதாள சாக்கடை பணிகள் முடிவுற்ற பின்னர் மனுதாரர் கோரியுள்ள பகுதிக்கு திட்டநிதி மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசு அனுமதி பெற்று தார்சாலை அமைக்கும் பணி மேற்கொள்வது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவத்திற்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

13) மனுதாரர் தனது 13.02.2026 நாளிட்ட மின்னஞ்சல் கடிதத்தில் தனது உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் 13.02.2026 தேதிய விசாரணைக்கு ஆஜராக முடியவில்லை எனவும், ஆவணங்களின் அடிப்படையில் தீர்ப்பு வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

14) இந்நிலையில். மனுதாரரின் புகார் மனு மற்றும் மனு தொடர்பான கடிதங்கள், எதிர்மனுதாரரான விழுப்புரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி உதவிப் பொறியாளரின் வாக்குமூலங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

விழுப்புரம் நகராட்சிக்கு உட்பட்ட வழுதரெட்டியில் புதிதாக அமைத்துள்ள சரவணா கார்டன், சண்முகா கார்டன் Phase-2 போன்ற பகுதியில் உள்ள சாலைகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால், அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பதாலும், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர், வேலைக்குச் செல்வோர், நோயாளிகள், மூத்த குடிமக்கள் போன்றவர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்பதாலும், இப்பகுதியில் உள்ள மண் சாலையால் வெயில் காலத்தில் தூசி மற்றும் மண்ணாலும், மழை காலத்தில் சேறாலும், நீராலும் அவதியுற நேரிடுகிறது என்பதாலும், மேற்படி பகுதி வாழ் மக்களின் சிரமத்தை போக்கும் வகையில், தார்சாலை அமைத்திட மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார் என்பது மனுதாரரின் புகார் மனுவிலிருந்து அறியமுடிகிறது.

மனுதாரரால் சாலை வசதி செய்து தரக்கோரியுள்ள இடமானது அனுமதியற்ற மனைப் பிரிவாகவுள்ளது என்பதும், 2011–ல் விழுப்புரம் நகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள வழுதரெட்டி ஊராட்சி பகுதியில் பாதாள சாக்கடை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது என்பதும், மேற்படி மனைப்பிரிவிலுள்ள 76 மனைகளில் 27 மனைகள் மட்டுமே வரன்முறை செய்யப்பட்டுள்ளது என்பதும், இதர மனைகள் வரன்முறை செய்ய அறிவிப்பு வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதும், மண்சாலைகளாக உள்ள இம்மனைப்பிரிவில் ஒரு சில குடியிருப்புகள் மட்டுமே அமைந்துள்ளது என்பதும், பாதாள சாக்கடை திட்ட பணிகளுக்காக பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து அதிகமுள்ள பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் சேதப்படுத்தப்பட்டுள்ள சாலைகளை மறு சீரமைப்பதற்காக திட்ட நிதியின் கீழ் அனுமதி பெற்று நகராட்சி மூலம் சாலைகள் போடப்பட்டு வருகிறது என்பதும், மேற்படி பாதாள சாக்கடை பணிகள் முடிவுற்றதும், மனுதாரர் கோரியுள்ள பகுதிக்கு தார்சாலை அமைப்பதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசு அனுமதி பெற்று சாலை வசதி செய்து தரப்படும் என்பதும் விழுப்புரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி உதவி பொறியாளரின் வாக்குமூலங்களிலிருந்து அறியமுடிகிறது.

இந்நேர்வில், மனுதாரருக்கு இருமுறை வாய்ப்பளித்தும் விசாரணைக்கு ஆஜராகாமல் இருந்தது ஏற்புடையதன்று, மேலும், மனுதாரர், ஆவணங்களின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கிட கேட்டுக்கொண்டுள்ளதைத் தொடர்ந்து, மனுதாரரின் பகுதியில் நடைபெற்றுவரும் பாதாள சாக்கடை பணிகள் முடிவுற்றதும், திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அரசு அனுமதி பெற்று சாலை வசதி செய்து தரப்படும் என விழுப்புரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி உதவி பொறியாளரின் வாக்குமூலங்களில் தெரிவித்துள்ளபடி உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ள விழுப்புரம் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 11–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திருமதி. K. மல்லிகா,
க/பெ. M. கிருஷ்ணமூர்த்தி,
பிளாட் எண்.97, சண்முகா கார்டன் பேஸ் – 2,
வழுதரெட்டி, விழுப்புரம்– 605 401,
விழுப்புரம் மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
விழுப்புரம் நகராட்சி,
விழுப்புரம் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர்,
சென்னை – 600 028.

4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர்,
சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

13/3/26
செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032